# 'மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்துவது அவசியம்'




மேற்கு தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற தேசிய தர மேம்பாட்டுக்குழு சென்னை கிளை மாநாட்டின் மலர் வெளியீட்டு விழாவில்.( இடமிருந்து) கருத்தரங்கு செயலர் கேட்டர் பில்லர் ஜி.சரவணன், துணைத் தலைவர் மேஜர் வி.வி.சந்திரசேகரன், கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயக்குமார், தர மேம்பாட்டுக்குழு வட்டம் சென்னை கிளைத் தலைவர் டி.ஆர்.நரசிம்மன், கல்லூரி தலைமை செயல் அலுவலர் சாய்பிரகாஷ் லியோ முத்து, தரக்குழு தேசிய துணைத் தலைவர் ஏ.சஞ்சீவ்ராவ், முன்னாள் தலைவர் ஏ.மயூரநாதன்,செயலர் பேராசிரியர் சி.உதயகுமார், முதல்வர் பழனிக்குமார், அண்ணா பல்கலைக்கழக இணை இயக்குநர் டி.கலைச்செல்வன்.

தாம்பரம், செப். 09: பொறியியல் தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்துவதில் சாய்ராம் கல்விக் குழுமம் முன்னிலை வகித்து வருகிறது என்றும் அந்த நடவடிக்கைக்கு உறுதுணையாகத் திகழ்வோம் என்றும் சாய்ராம் கல்விக் குழுமச் செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து கூறினார்.

மேற்கு தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரியில் இந்திய தரக்குழு வட்டம் சென்னை கிளை மாநாடு தொடக்க விழா சனிக்கிழமை நடைபெற்றது. விழாவில், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற சாய்பிரகாஷ் லியோ முத்து மேலும் பேசியது:

தொழிற்சாலைகளில் சாதனங்கள்,உதிரிப்பாகங்கள் தயாரிப்பில் கடைப்பிடிக்கப்படும் தரம் மேம்பாட்டு நடவடிக்கைகள் தான் நம்பகத்தன்மையும்நிறைந்தபொருட்கள் உற்பத்திக்கான அடித்தளமாகத் திகழ்கின்றன. தொழிற்சாலைகளில் புதிதாக பணியில் சேரும் மாணவர்களுக்கு ஆறு மாத காலம் தரம் மேம்பாட்டுத் திறன் குறித்த பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

தொழில்நிறுவனங்களின்எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில், பொறியியல் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு கல்லூரி வளாகத்தில் பயிற்சி அளிக்க முன்வந்துள்ள சென்னை தரம் மேம்பாட்டுக் குழுவின் சேவை பாராட்டத்தக்கது.

இதன் மூலம் தொழில் துறைக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் அதிகரித்துள்ள இடைவெளி குறைய வாய்ப்புள்ளது.

மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் ஆசிரியர்களுக்கும் தரம் மேம்பாட்டு பயிற்சி அளிக்க முன்வந்து இருப்பது வரவேற்கத் தக்கது. தரம்மேம்பாடு பயிற்சி மூலம் தயாரிப்புப் பொருட்களின் தரம் மட்டுமல்லாமல், மாணவர்களின் மனப்பாங்கு, நடவடிக்கைகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்படும்.

சென்னையில் அகில இந்திய தரம் மேம்பாட்டுக் குழு அமைப்பின் தேசிய மாநாடு நடத்த முன்வந்தால் தேவையான உதவிகள் வழங்கி உறுதுணைபுரிய தயாராக உள்ளோம் என்றார் அவர்.

சென்னை தரம் மேம்பாட்டுக் குழு வட்டம் தலைவர் டி.ஆர். நரசிம்மன், துணைத் தலைவர் மேஜர் வி.வி.சந்திரசேகரன், செயலர் சி.உதயகுமார், கருத்தரங்குச் செயலர் கேட்டர் பில்லர் ஜி.சரவணன், ஏ.மயூரநாதன், அண்ணா பல்கலைக்கழக தொழில் நிறுவனங்கள் ஒருங்கிணைப்பு மைய இணை இயக்குநர் டி.கலைச்செல்வன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

Dinamani 10/09/17 pg.no.4